# தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை

# TAMIL NADU OPEN UNIVERSITY, CHENNAI

## பருவ இறுதித் தேர்வுகள் - ஜுன் 2021

## TERM END EXAMINATIONS - JUNE 2021

### இணையவழித் தேர்வுக்கான முக்கிய வழிமுறைகள் (அண்மையில் புதுப்பிக்கப்பட்டது)

### Important instructions for Online Examinations (Current Updation)

1. பருவ இறுதித் தேர்வுகள் - ஜுன் 2021, www. tnou.ac.in இணையதளத்தில் வெளியிடப்பட்ட தேர்வு அட்டவணைப்படி, இணையம் வாயிலாக நடத்தப்படும். மாணாக்கர்கள் கோவிட் - 19 பரவல் சூழலைக் கருத்தில் கொண்டு, வசிக்கும் இடத்திலேயே தேர்வு எழுதலாம்.

   Term End Examinations - June 2021 is conducted through online as per the examination Time-Table given in the website: www.tnou.ac.in. The students can write the examinations at their residence keeping safe in view of COVID -19 pandemic situations.

2. கீழ்க்காணும் மாணாக்கர்களுக்கு பருவ இறுதித் தேர்வுகள் - ஜுன் 2021 நடத்தப்படுகின்றன.

   i. முதுநிலைப் பட்டப் படிப்புகள்
   ii. முதுநிலைப் பட்டடையப் படிப்புகள்
   iii. இளநிலை பட்டப் படிப்புகள்
   iv. தொழிற்சார் பட்டையப் படிப்புகள்
   v. சான்றிதழ் படிப்புகள்
   vi. நிலுவைத் தாள்களுக்காக அக்டோபர் 2020 இல் தேர்வு முடிவுகளைப் பெற்ற மாணாக்கர்கள் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கட்டாயம் பாடத்தேர்வுகள் மற்றும் செய்முறைத்தேர்வுகள்தேர்வு எழுத வேண்டும். இதற்கான தேர்வுக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை.
   vii. மாணாக்கர்கள் 2003 ஆம் ஆண்டு முதல் தேர்வுகளில் தேர்ச்சி பெறாத தாள்களுக்கு இறுதி வாய்ப்பாக, விண்ணப்பிக்கலாம்.

   The Term End Examinations – June 2021 is conducted for the students of various programmes offered by TNOU namely, Post graduate (PG), Post-Graduate Diploma, Under Graduate (UG), Diploma programmes, Vocational Diploma and Certificate programmes.

   The students who were declared pass in the arrear papers/courses during October 2020 should write both theory and practical examinations compulsorily

as per the judgement of the Hon'ble Madras High Court. These students need not to pay the examination fees.

All the arrear candidates of all programmes since 2003 can also apply for writing arrear courses as the last chance.

3. (அ) ஜுன் 2020-க்கான பருவத் தேர்வில், மாணாக்கர்களின் நிலுவையில் உள்ள பாடம் மற்றும் செய்முறைப் தேர்வுப்பாடங்கள், அரசாணை எண்.125-இன்படி குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண் அளித்து அனைவரும் தேர்ச்சி என்று அறிவிக்கப்பட்டதை, மேதகு சென்னை உயர்நீதி மன்றம் இத்தகைய தேர்ச்சியை ரத்து செய்து தேர்வு எழுத வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டதன் அடிப்படையில் மாணாக்கர்கள் தவறாமல் தேர்வு எழுத அறிவுறுத்தப்படுகிறது.

(ஆ) மேலும், துணை இணையவழி செய்முறைத் தேர்வுக்கான அட்டவணை 01.07.2021 முதல் 04.07.2021 வரை நிலுவைப்பாடங்களைக் கொண்ட முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு இளநிலை மற்றும் முதலாம் ஆண்டு முதுநிலைப் பட்டப் படிப்பு மாணாக்கர்களுக்கு நடத்த இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) தற்போதைய இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்பு மாணாக்கர்கள், ஏனைய பட்டையப் படிப்பு மாணாக்கர்கள் மற்றும் சான்றிதழ் படிப்பு மாணாக்கர்கள் 10.04.2021 முதல் 17.04.2021 வரையில் நடைபெற்ற இணையவழி செய்முறைத் தேர்வில் எழுத தவறிய அனைத்து மாணாக்கர்களும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள துணை செய்முறைத் தேர்வு அட்டவணைப்படி தேர்வு எழுதலாம்.

(a) Arrear students who were given minimum pass mark as per G.O.No.125 are informed to appear for the examination (Based on the Judgement of Hon'ble High Court of Madras) now compulsorily.

(b) Further, a Supplementary Online Practical Examinations is also scheduled from 01.07.2021 to 04.07.2021 for I and II year of UG and I year of PG of Arrear students who were given pass in TEE June 2020 based on G.O. No.125 and the same is quashed by the Hon'ble High Court of Madras and directed that the students should write the Examinations for clearing such subjects.

(c) Further, If any present UG and PG students, all the Diploma and Certificate programme students who were missed out the Online Practical Examinations held from 10.04.2021 to 17.04.2021 are also allowed to attend the Supplementary online Practical Examinations scheduled as above.

4. தமிழக அரசாணைக்கிணங்க கொரோனா நோய் தொற்று காரணமாக முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு இளநிலை பட்டப்படிப்பில் பயிலும் மாணாக்கர்களுக்கும் முதுநிலை முதலாம் ஆண்டு பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கும் நிலுவையில் உள்ள பாடங்களுக்கு (Arrears) தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கு அளித்து தேர்ச்சிப்

பெற்றதாக முடிவுகள் அக்டோபர் 2020-இல் வெளியிடப்பட்டது. எனினும், அத்தேர்ச்சியானது ரத்து செய்யப்பட்டு தேர்வு எழுத மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியதை முன்னிட்டு அவ்வாறு தேர்வு முடிவுகளை பெற்ற மாணாக்கர்கள் தேர்வுக் கட்டணமின்றி பல்கலைக்கழகம் நடத்தவிருக்கும் ஜுன் 2021 தேர்வுகளில் எழுத அறிவுறுத்தப்படுகிறீர்கள். தேர்வு அட்டவணை www.tnou.ac.in என்ற இணையதளத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளவும்.

In accordance with the Tamil Nadu Government Orders in view of COVID-19, the result was declared as pass to the students of first year and second year of Under Graduate Programmes and first year of Post-Graduate Programmes, by giving exemption from appearing arrear Examination during October 2020. However, as per the directions of the Hon'ble Madras High Court, the G.O. was quashed and ordered to conduct the Examinations for such students. Therefore, students are asked to take up the Examination during May 2021 without paying examination fee. The Examination Time Table is available in the TNOU website: www.tnou.ac.in.

5. நிலுவைத் தேர்வுகள் 2003 முதல் கொண்டுள்ள மாணாக்கர்களுக்கு "ஒரு முறை மட்டும் இறுதி வாய்ப்பாக" தேர்வுகள் எழுத அனுமதிக்கப்படுகின்றது. இவர்கள் தற்பொழுதுள்ள பாடத்திட்டம், தேர்வுக்கான விடைத்தாள் அமைப்பு போன்றவற்றில்தான் தேர்வுகள் எழுத வேண்டும்.

   The arrear candidates from 2003 are given one-time final chance for Term End Examinations-2021, however, they have to take up the existing syllabi of the respective courses with present course code and question paper.

6. இணையதளம் / ஊடுவலை இணைப்புடன் கூடிய ஆண்ட்ராய்டு கைபேசி, தேர்வுக்கான குறைந்தபட்சத் தேவை ஆகும்.

   The minimum requirement for examination is Android Cell Phone with net connectivity.

7. குறிப்பிட்ட தேர்வுகளுக்கான வினாத்தாள்களை, தேர்வு நாளன்று காலை 9 மணியிலும், மதியம் 01 மணியளவிலும் மாணாக்கர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மாணாக்கர்கள் வினாத்தாளைப் பதிவிறக்கம் செய்தோ, நேரடியாக வினாத்தாளை இணையத்தில் பார்த்தோ காலைத் தேர்வினை, காலை 10 மணி முதல், நண்பகல் 01.00 மணிவரையும், மாலைத் தேர்வினை 02.00 மணிமுதல் 05.00 மணி வரையிலும் ஒவ்வொரு தேர்வினையும் எழுதலாம். தேர்வு எழுதிய அன்றே விடைத்தாளை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக தேர்வு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். விடைத்தாள்களை தேர்வு எழுதிய அன்றோ அல்லது அடுத்த நாளிலோ பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.

   The Question papers (QP) for the respective course/paper of writing examination will be made available to the students for downloading on the date of examination at 09.00 a.m. for F.N. session and 01.00 p.m. for A.N. session. The student can either download or view the question paper for examination and write for a duration of 3 hours each course/paper from 10.00 a.m. to 01.00 p.m. and 02.00 p.m. to 05.00 p.m . for forenoon and afternoon session respectively. After writing the examination, the answer scripts should be uploaded in the web-portal and hard copy of answer scripts to be sent to the University on the same day or the next day of examination.

8. முகப்பு பக்க உள்ளடக்கம் இணையதளத்தில் உள்ளது. மாணாக்கர்கள் அதனைப் பதிவிறக்கம் செய்து, அதனைப் பிரதி எடுத்து தேர்வெழுதும் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக நிரப்பி, அதனை விடைத்தாளுடன் இணைக்க வேண்டும் (இணைப்பு 1).

   Front page content is given in online portal, students can download and take print out and fill up for every paper / course of writing examination, and attach the same in the answer script (Annexure 1).

**(அல்லது) (OR)**

மாணாக்கர் விடைத்தாளின் முகப்பு பகுதியை A4 அளவு வெள்ளைத் தாளில் தேர்வுக்கு வெகு முன்பாகவே கீழ்க்கண்டவாறு தன் சொந்த கையெழுத்தில் தயார் செய்துக் கொள்ளவேண்டும்.

The student shall prepare front page of the answer script in A4 size white paper well-in-advance before taking examination in his/her own handwriting including following aspects:

| தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்<br>**TAMIL NADU OPEN UNIVERSITY**<br>பருவ இறுதி இணையவழித் தேர்வுகள் - ஜுன் 2021<br>**TERM END ONLINE EXAMINATIONS – JUNE 2021** | |
|---|---|
| **சேர்க்கை எண்**<br>Enrolment Number | |
| **மாணாக்கர் பெயர்**<br>Student Name | |
| **படிப்பு**<br>Programme | UG / PG / PG Diploma / Diploma /<br>Vocational Diploma / Certificate |
| **பாடத் தலைப்பு**<br>Course Title | |
| **பாடக் குறியீடு**<br>Course Code | |
| **தேர்வு தேதி**<br>Exam Date | |
| **மொத்தம் எழுதிய பக்கங்கள்**<br>Total Pages Written | |
| **கையெழுத்து**<br>Signature | |

9. மாணாக்கர் தேர்வு வினாக்கான விடைகளை A4 அளவு கோடிடப்படாத வெள்ளைத்தாளில், ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

   The student should write the answers of the examination in the A4 size white unruled plain paper in one side only.

10. மாணாக்கர் விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்திலும் கீழ் பகுதியில் சேர்க்கை எண் எழுதி கையொப்பமிட வேண்டும்.

    The student should write Enrolment Number and make a Sign in the bottom of each page of the answer sheet.

11. மூன்று மணி நேரம் தேர்வை முடித்தபின், மாணாக்கர்கள் விடைத்தாள்களை ஸ்கேன் செய்து, தேர்வு நாளன்றே அதனைத் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத் தேர்வு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

    After completion of writing Examination the student should upload the scanned copy of answer sheets on the same day of examination through online portal of the TNOU.

12. மாணாக்கர்கள் தேர்வு எழுதியபின் விடைத்தாள்களை "தேர்வாணையர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், 577, அண்ணா சாலை, சைதாப்பேட்டை, சென்னை 600 015" என்ற முகவரிக்கு தபால் / கூரியர் மூலமாக அனுப்ப வேண்டும். விடைத்தாள்கள் அனுப்பும் A4 அளவு துணி-ஒட்டப்பட்ட உறையின் மேற்புறத்தில் EXAM CONFIDENTIAL என்று எழுதவும். காலதாமதமாக அனுப்பப்படும் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பதிவேற்றம் செய்யப்பட்ட விடைத்தாள் மற்றும் தபால் மூலம் பெறப்பட்ட விடைத்தாள், இவை இரண்டும் ஒப்பிடப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். இவற்றில் மாற்றங்கள் இருப்பின், தேர்வுத்தாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

    On the same day of examination, the answer script of the paper / course should also be sent to "The Controller of Examinations, Tamil Nadu Open University, 577, Anna Salai, Saidapet, Chennai 600 015" through Speed post/ Registered post/ Courier. The students has to keep the answer script in the A4 size cloth-lined envelope and write on the upper side of envelope as EXAM CONFIDENTIAL. The Answer scripts received belatedly will not be considered for evaluation. Both uploaded soft copy and posted answer scripts will be compared and if any change is there, the answer script will not be evaluated.

13. பார்வைக் குறைபாடுள்ள மாணாக்கர்கள், பல்கலைக்கழக முன் அனுமதி பெற்று, தேர்வு எழுத உதவியாளர்களை ஏற்பாடு செய்துக் கொள்ளலாம்.

    The person with blindness may have scribe for writing the examination with the prior permission of the University.

14. அனைத்து விதமான தேர்வு முறைகேடுகளும் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு, முறைகேட்டில் ஈடுபடும் மாணாக்கர்கள் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக விதிகளின்படி, தேர்வெழுதத் தடைசெய்யப்படுவார்கள்.

    Malpractice, in any form, will be viewed seriously and such students will be debarred for the examinations as per the TNOU norms.

15. மாணாக்கர்கள் தேர்வுகள் தொடர்பாகத் தொடர்ந்து மேம்படுத்தப்படும் தகவல்களைப் பெற, www.tnou.ac.in என்ற இணையதளத்தைப் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

    The students are informed to keep watching the website www.tnou.ac.in regularly for continuous updating of examinations information.

**S/d**

Date: 13.05.2021 **Controller of Examinations i/c.**

## முக்கிய அறிவுரைகள்
## Important Instructions

### தேர்வின் போது இணையதளத்தில் செய்ய வேண்டியவை
### How to do in exam web portal?

படிநிலை 1:

**Step-1:**

மாணாக்கர் http://exam.tnouniv.com என்ற இணையதளத்திற்குச் செல்லவும்

The Student should go to http://exam.tnouniv.com

படிநிலை-2

**Step-2:**

இணையதளத்திற்குச் சென்றவுடன் கீழ்க்காணும் திரை தோன்றும். அதில் தங்களுடைய சேர்க்கை எண்ணை Enrolment No. என்ற இடத்தில் பதிவு செய்யவும். அடுத்து Mobile No. என்ற இடத்தில் தங்களுடைய அலைபேசி எண்ணைப் பதிவு செய்யவும். தொடர்ந்து, Sign in என்ற பொத்தானை அழுத்தவும்.

After entering into website, the following screen will appear, in which enter your Enrolment Number and Mobile Number, and make a click on “sign in”.




படிநிலை-3

**Step-3:**

படிநிலை 2இல் Sign in பொத்தானை அழுத்திய பிறகு, கீழ்க்காணும் திரை தோன்றும். இதில் தேர்வுத் தேதி வரிசையில் உள்ள “Question paper” என்ற பொத்தானை அழுத்தவும். திரையில் தோன்றக்கூடிய வினாத்தாளை பதிவிறக்கம் செய்து தேர்வை எழுதவும்.

After click the 'sign in', the follwing screen appears. Then, click the "Question Paper" and download it for writing exam.




**படிநிலை-4**

**Step-4:**

**தேர்வு எழுதிய பிறகு எழுதிய விடைத்தாளை கைபேசியில் புகைப்படம் எடுத்தோ / ஸ்கேன் செய்தோ சேமித்து வைத்துக்கொள்ளவும்.**

After writing exam, answer script pages shall be photocopied / scanned in mobile phone and saved.

**படிநிலை-5**

**Step-5:**

அதன் பிறகு திரையில் காணும் சிவப்பு நிற "**Covert to PDF**" என்ற பொத்தானை அழுத்தவும். அதனைத் தொடர்ந்து "Browse" என்ற பொத்தானை அழுத்தி சேமித்து வைத்துள்ள விடைத்தாளின் புகைப்படங்களை பக்க எண் வரிசைப்படி தெரிவு (Select) செய்யவும்.

Later, click the red coloured "**Convert to PDF**" appearing in the screen. Then, click the "Browse" button and select the photocopied answer sheets page by page according to serial number.






## படிநிலை-6

## Step-6:

தெரிவு செய்த விடைத்தாள் பதிவுகள் (Images) உங்கள் திரையில் அடுத்தடுத்து காண்பிக்கப்படும். தாங்கள் தெரிவு செய்த விடைத்தாள் பதிவுகள் 1,2,3 என்ற பக்க எண் வரிசைப்படி இருக்குமாறு செய்யவும் அல்லது திரையில் தோன்றும் Pageup / Pagedown பொத்தானை அழுத்தி 1,2,3 என வரிசைப்படுத்தவும்.

Selected answer script images are shown side-by-side in the screen. your selected answer script page number shall be in ascending order like 1,2,3… or the page up / page down show in the screen shall be clicked to arrange page numbers as 1,2,3…

## படிநிலை-7

## Step-7:

தெரிவு (Select) செய்தபின், கீழ்க்காணும் திரை தோன்றும். “Download as PDF” என்ற பொத்தானை அழுத்தவும்.

After selecting, the following screen will appear. Click the “Download as PDF”.



## படிநிலை-8

## Step-8:

அதன்பின், திரையில் காணும் செய்தியை OK என்ற பொத்தானை அழுத்தி உறுதி செய்யவும்.

Then, click the “OK” button to ensure PDF conversion.




## படிநிலை-9

## Step-9:

‘OK’ என்ற பொத்தானை அழுத்திய பிறகு கீழ்க்காணும் திரை தோன்றும். அதில் ”Save File” என்பதை தெரிவு செய்து OK என்ற பொத்தானை அழுத்தவும்.

After pressing “OK” button, the following screen will appear. Then, select the “Save File” and click “OK” button.



## படிநிலை-10

## Step-10:

இப்பொழுது PDF ஆக மாற்றம் செய்யப்பட்ட கோப்பு தரவிறக்கம் செய்யப்படும்.

Now, the converted file as PDF gets downloaded.




## படிநிலை-11

## Step-11:

பிறகு முகப்பு பலகைக்குச் (Dashboard)- க்குச் சென்று கீழ்க்காணும் திரையில் ”Upload Answer Sheet” என்ற பொத்தானை அழுத்தவும்.

Then, come to Dashboard and find the following screen, and click “Upload Answer Sheet” button.



படிநிலை-12

**Step-12:**

அதன்பிறகு திரையில் காணும் “Browse” என்ற பொத்தானை அழுத்தவும்.

After that, click the “Browse” button




படிநிலை-13

**Step-13:**

PDFஆக பதிவிறக்கம் செய்யப்பட்ட தங்களது விடைத்தாளை தெரிவு செய்து Open என்ற பொத்தானை அழுத்தவும்.

Then, select the converted PDF of your answer script and press the “Open” button.



படிநிலை-14

**Step-14:**

**தற்போது கீழ்க்காணும் "Sa" என்ற பொத்தானை அழுத்தி விடைத்தாளை பதிவேற்றம் செய்யவும்.**

Now, Click the "Submit" button given below in the screen to upload answer script.




படிநிலை-15

**Step-15:**

**பதிவேற்றம் செய்த பின் "Uploaded successfully" என்று வரும் வரை காத்திருக்கவும்.**

After uploading, wait until it appears as "uploaded successfully".




**தற்பொழுது தங்களது அனைத்து விதமான செயல்பாடுகளும் நிறைவு பெற்றன.**

Now, all the activities came to an end successfully.